விலையில் நூல் கிடைக்கும் அடிப்படையான கருத்தோடு ஆரம்பிக்க ஏதாவது திட்டவட்டமான கருத்தை வற்புறுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி ஆலோசித்து அப்படி இயலுமானால் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

கிராமச் சிப்பந்திகளின் சம்பளம்

* 27 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா கிராம சிப்பந்திகளுக்கும் (மணியம், கர்ணம், தலையாரி, தோட்டி) விலைவாசியை முன்னிட்டு சம்பளத்தை உயர்த்த உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இந்த உத்தேசம் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, is the Minister for Food aware of the fact that the scales of pay paid to the Village headman, karnam, talaiyari and thotti are tantalisingly negligible when compared to the services rendered by them to the society, and in view of this disparity will the Government think of revising their salaries at least in the coming period?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அந்த உத்தேசம் இப்போது இல்லை. 1964-ம் ஆண்டில் ஆக்டோபர் முதற் கொண்டு வில்லேஜ் ஹெட்மென்னுக்கு சம்பளம் 17 ரூபாய் என்றிருந்ததை 34 ரூபாயாகவும் கர்ணங்களுக்கு 18 ரூபாயாக இருந்ததை 36 ரூபாயாகவும் கடைநிலை ஊழியர்களுக்கு 11 ரூபாயாக இருந்ததை 28 ரூபாயாகவும் திருத்தியமைக்கப்பட்டது. ஆதோடு கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்களுக்கு டெவலப்மெண்ட் அலவன்ஸ் என்ற பெயரால் நாமினல் சார்ஜாக சில கிராமங்களில் மணியகாரர்களுக்கு 7 ரூபாயும், வேலைப்பளு குறைவாக உள்ள இடங்களில் 3 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிகவேலை உள்ள இடங்களில் கர்ணங்களுக்கு 15 ரூபாய் அலவன்ஸும், சாதாரண வேலை உள்ள இடங்களில் 12 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஊதிய சீர்திருத்த அமைப்பு விலைவாசியை யொட்டி போதுமானதாக இல்லாமலிருந்தாலும் இது பற்றி ஒரு கமிட்டி 1955-ல் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இப்போது மேல் அவைத் தலைவராக இருக்கிற திரு. மாணிக்கவேலு அவர்கள், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்—இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி மணியக்காரர்கள். கணக்குப் பிள்ளைகள் இவர்கள்

1967 ஜூன் 19]

சம்பளம் பற்றி திருத்தியமைக்கலாமா என்ற கொள்கையை ஆராய்ந்தது. அதன் விளைவாக இரண்டு மூன்று கிராமங்களை இணைத்து அந்தக் கிராம மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளை இவர்கள் வேலையை ஒன்ருக இணைத்து, அதன்கீழ் மூன்று உத்தியோகஸ்தர்களை நியமித்து அப்படிச் செய்யலாம் என்ற பரிந்துறையை வழங்கியது. அந்தப் பரிந்துறையை திரு. பக்தவத்சலம் அவர்களை முதல் அமைச்சராக கொண்டிருந்த சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. அது சரியான பரிந்துரை அல்ல அதனுல் பல கொடுதல்கள் வரும் என்று கருதியது. பக்தவத்சலம் பரிந்துரையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

28 வினு.—திரு. கெ. இரா. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் எத்தனை கிராம மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர்?

(இ) அவர்கள் சர்க்காரின் பகுதிநேர ஊழியர்களா? முழு நேர ஊழியர்களா?

(உ) முழு நேர ஊழியர்கள் இல்லையென்ருல், இவர்களை முழுநேர ஊழியர்களாக்கி, மற்ற அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவது போல் சம்பளம் முதலியன இவர்களுக்குக் கொடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) கிராமத் தலைமை அலுவலர்கள் 11,765. கிராம கணக்கர்கள் 11,374.

(இ) அவர்கள் பகுதி நேர அரசாங்கப் பணியாளர்கள்.

(உ) இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : கிராம மணியக்காரர், கணக்குப் பிள்ளை இவர்களை நியமிப்பதில் பரம்பரை முறையைத் தவிர, தகுதி முறையை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைபற்றி முடிவுகள் பரிந்துரையில் இருக்கின்றன. இதுபற்றி விரிவான முடிவை அரசாங்கம் எடுக்கவில்லை.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கிராமங்களில் ஏற்படும் அத்தனை பூசல்களுக்கும் கிராமக் கர்ணங்கள், மணியக்காரர்கள் இவர்கள் காரணமாக இருப்பதால் இந்த முறையை, கர்ணம், மணியக்காரர்கள் இவர்களை ஒழித்து விட்டு அரசாங்கமே கிராம சர்வீஸ் என்ற அடிப்படையில் அதற்கான கல்வித் தகுதி போன்ற யோக்கியதாம்சங்களை நிர்ணயித்து ஒரு புதிய சர்வீஸை ஆரம்பிக்க அரசு உத்தேசிக்குமா ?